இறக்காமம் பிரதேச சபை
அம்பாரை மாவட்டம்

# 1. நிதிக்கூற்றுகள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இறக்காமம் பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் (UNDP) கீழ் நிர்மாணிக்கப்பட்டு சபையிடம் 2016 பெப்ரவரி 17 ஆந் திகதி கையளிக்கப்பட்ட ரூபா 4,799,500 பெறுமதியான பொதுச் சந்தைக் கட்டிடம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பழைய அலுவலகக் கட்டிடம் முற்றாக தகர்க்கப்பட்டு அவ்விடத்தில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் ரூபா 10 மில்லியன் கிரயத்தில் புதிய அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 2011 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்ட போதிலும் கட்டிடத்தின் பெறுமதி மாற்றம் கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் ஒவ்வொரு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சான்றுகளின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| கட்டிடங்கள் | 3,476,675 | நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| பெறவேண்டிய இறைச்சிக்கடை குத்தகை | 535,277 | மீதிகளை உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் நிலுவை விபரம் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 1,637,187 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 2,612,179 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 974,992 பின்னடைவைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வாடகை, உரிமைக்கட்டணம், ஏனைய வருமானங்கள் என்பன 12 வீதம் முதல் 65 வீதம் வரையான வீச்சில் அதிகரித்தும், அரசிறை மானியம் 10 வீதத்தினால் குறைவடைந்தும் காணப்பட்டிருந்தது.

### 2.3 வருமான முகாமைத்துவம்

#### 2.3.1 வீதவரிகள் மற்றும் வரிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய, பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள 368 வர்த்தக நிலையங்கள் மற்றும் 4,673 வீடுகள் மீது 2010 ஆம் ஆண்டு தொடக்கம் வீதவரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் வருடாந்தம் அண்ணளவாக ரூபா 2,520,500 தொகையான வருமானம் இழக்கப்படுகின்றது.

#### 2.3.2 இறைச்சிக் கடை குத்தகைப் பண அறவீடு

2003 முதல் 2010 ஆம் ஆண்டு வரை நிலுவையாகவுள்ள இறைச்சிக் கடை குத்தகைப் பணமாகிய ரூபா 1,029,223 தொகை இன்றுவரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) ரூபா 291,339 மொத்த பெறுமதியான 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலங்கடந்த 17 வைப்புக்களை நிதிப் பிரமாணம் 571 இற்கு அமைவாக உரிய நபர்களுக்கு திருப்பிச் செலுத்துவதற்கோ அல்லது வருமான கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அலுவலக கட்டிடம், பொது நூல் நிலையம், பொதுச் சந்தை, பொது விளையாட்டு மைதானம் மற்றும் விலங்கு அறுமனை என்பன அமைந்துள்ள 06 காணிகளின் உரிமத்தினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,338,328 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட விலங்கு அறுக்கும் கொல்களமானது மயானத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ளமையினால் பொதுமக்களின் எதிர்ப்புகளிற்கு மத்தியில் அதனை இன்று வரை பயன்படுத்த முடியாதுள்ளது.

(ஆ) மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் ரூபா 997,147 கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்ட திண்மக்கழிவு மீழ்சுழற்சி நிலையத்திற்கு தேவையான இயந்திரங்கள் பொருத்தப்படாமையால் இன்று வரை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல். |
| (ஆ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல். |